★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 16உ செவ்வாய் (28—2—56) ★ ★ வெளியூர்: மாசி 17உ புதன் (29—2—56) [இதழ் 219

தமிழகப் புயல் சேதங்கள்

நிதி அமைச்சர் தரும் புள்ளி விவரங்கள்

புயலால் மாண்டவர்கள் 520 பேர்;
வெள்ளத்தில் அழிந்த கால்நடைகள் 35,000;
ஆடுகளின் எண்ணிக்கை 1,10,000;
சேதமடைந்த வீடுகள் 3,00,000;
வீழ்ந்த மரங்கள் 5,00,000—இவற்றில் பெரும்பகுதி தென்னை மரங்கள்;
கரை உடைந்த குளங்கள் 4,600.

—சென்னை சட்டசபை வரவு-செலவுத் திட்டத்தில்

இந்தத் திட்டத்திலும் ஓரவஞ்சனை!

இந்திய பேரரசின் இயல்பு மாறவில்லை

தென்னாட்டின் தொழில் வளத்திற்கு முட்டுக்கட்டை

சட்ட சபையில் படை திரட்டும் பாசாங்கு!

கனம் சுப்பிரமணியத்தின் முகாரி

"இரும்பு-உருக்குத் தொழில்களை முதன்மையாகக்கொண்ட அடிப்படைத் தொழில்களின் வளர்ச்சிக்காகப் பெரும் முதலீடு செய்வதையும், அவைகளுக்கேற்பப் போக்குவரத்துச் சாதனங்களை விரிவாக்குவதையுமே இரண்டாவது திட்டம் மையமாகக் கொண்டிருக்கிறது. அவைகளுக்காக முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள ரூ. 2,000 கோடியில், குறிப்பிடத் தகுந்த தொகை தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நம்மிடத்தில் நிலக்கரி கிடையாது என்பது உண்மைதான்; இருந்தாலும், தொழில் வளர்ச்சிக்காகத் திட்டத்தின் கீழ் தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளவை அதிருப்திகரமானது எனும் உண்மையை, அதனால் மாற்றிவிட முடியாது.

"நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டத்திற்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; இதனால் தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள விகிதாசாரத்தில் பெருக்கம் ஏற்பட்டுவிடாது; அதுவுமன்றி, நெய்வேலி திட்டம் இன்னமும் பரீட்சார்த்த கட்டத்தில்தான் இருக்கிறது.

எனவே, உத்தேசப் பெருந்தொழில்களுக்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் அரிய வாய்ப்புகள் இருப்பதால், அவைகளை நிர்மாணிப்பதில் தென்னாட்டிற்கு ஏதாவது சலுகைக் காட்டியாகவேண்டும். பயிர் செய்யப்பட்டுவரும் ஒவ்வொரு ஏக்கர் நிலத்தையும் நம்பி வாழ்ந்துவரும் தேவைக்கு அதிகமான மக்கள் கூட்டம் இங்குதான் இருக்கிறது.

"மின்சாரக் கருவிகளை உற்பத்திச் செய்யக்கூடிய பெருந்தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் இன்றியமையாத வசதிகளை நம்மால் அளிக்கமுடியும். சேலத்தில் புதைந்து கிடக்கும் பாக்சைட்டிலிருந்து அலுமினியத்தை உற்பத்திச் செய்வதற்கு குறைந்த செலவில் மின்சாரம் நம்மிடம் இருக்கிறது.

"புதிதாக உற்பத்திச் செய்யப்படும் உருக்கு இரும்பைக் கொண்டு பெரிய இயந்திரச் சாதனங்களை உருவாக்குவது நம்மால் சாத்தியமாகும். இவைகளைக் குறித்து எல்லாம் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவைகள் நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு உயிர்நாடிகளாக இருப்பவை. எனவே, திட்டக் குழுவும், இந்தியப் பேரரசும் போதிய அளவு கருத்துச் செலுத்த, என்னுடைய நடைமுறையை, இந்தச் சபை என்னுடன் இணைந்து ஆதரிக்குமென்று நம்புகிறேன்.'

இவ்வாறு சென்னை வரவு-செலவுத் திட்டத்தை சட்டசபையில் சமர்ப்பித்துப் பேசுகையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

ரூ. 3-கோடி மிச்சம்!

புதுடில்லி, பிப். 27—

பாதுகாப்புப் படை செலவு இனங்களில், இந்த நிதி ஆண்டில், ரூ. 3 கோடி மிச்சம் பிடிக்கப்பட்டுள்ளதாம்!

காங்கிரஸ் கட்சியினரும் அர்த்தாலில் ஒத்துழைத்தனர்!

கொரடாச்சேரியில் மாபெரும் வெற்றி

கொரடாச்சேரி வட்டாரத்தில் தி. மு. கழகத் தோழர்களின் முயற்சியால் வெற்றிகரமான அர்த்தால் நடைபெற்றது.

நகரில் உள்ள எல்லாக் கடைகளும், பெரிய 15 மில்களும், மூடிக்கிடந்தன; நகரில் உள்ள குதிரை வண்டிகள் யாவும் அன்று ஓடவில்லை; பஸ்கள், டவுனில் அனுமதிக்கப்படவில்லை; சினிமாக் காட்சிகள் அன்று நடைபெறவில்லை; உயர்நிலைப் பள்ளியில் 550 மாணவர்களில் 50 மாணவர்கள் மட்டுமே சென்றார்கள்.

காங்கிரஸ் தோழர்கள் எல்லோரும் அர்த்தாலில் ஒத்துழைத்தார்கள்; மேலிடத்து அறிக்கை வந்தும், தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் நன்னிலம் எம்.எல்.ஏ-வுமான தியாகராச பிள்ளைக்குச் சொந்தமான மில், எண்ணெய்க் கடை, உப்பு மண்டி, கதர் ஸ்டோர் ஆகியவைகளும் மூடப்பட்டிருந்தது.

கொரடாச்சேரியில் முழு அர்த்தால் நடைபெற்றது. ஊர்வலத்திற்குத் தடைபோடப்பட்டு, மாலை 5 மணிக்கு அங்கு வந்த டெபுடி சூப்பிரண்டெண்டெண்டிடம் அனுமதி பெற்று ஊர்வலம் நடத்தப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட 1,000 பேர் ஊர்வலத்தில கலந்துகொண்டனர்; கூட்டத்தில் உறுதிமொழி எற்றுக் கொள்ளப்பட்டது

வட்டச் செயலாளர் முயற்சியால் கொரடாச்சேரி சுற்றுவட்டத்திலும், கிராமங்களிலும் அர்த்தால் நடைபெற்றது. வெண்ணவாசல், பெருமாளகரம், புத்தூர், அபிவிருத்தீசவரம், செல்லூர், திருக்கொள்ளம்புதூர் இவைகளில், செல்லூரில் இரண்டு காங்கிரஸ்காரர் கடையை தவிர மற்ற கிராமங்களில் உள்ள மில், கடைகள், அங்காடி கடைவரையில் மூடப்பட்டுவிட்டன.

3,000 நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர்

ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் அர்த்தாலில் கலந்துகொண்டனர்

சென்னநாயக்கன்பாளையம் திரண்டெழுந்த காட்சி

பொது வேலைநிறுத்தம் சிறப்பாக நடைபெற்றது; 3,000-திற்கு மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்களும், 3,000-திற்கு அதிகமான விவசாய மக்களும், கடைவியாபாரிகளும் பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

மாலை 3 மணிக்கு, தோழர் வி. சிவப்பிரகாசம் தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று செட்டியார் சத்திரத்தை வந்தடைந்தது.

மாலை 6 மணிக்கு நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் எஸ் ஆறுமுகம் தலைமை வகித்தார். தோழர்கள் வி. சிவப்பிரகாசம், சே. மூசா ஆகியோர் பேசியபின் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

கண்ணமங்கலம் தோழர்கள் அபராதம் கட்ட மறுத்தனர்

'பின்னர் வசூலித்துக்கொள்கிறோம்' என்று கூறி விடுதலை செய்தனர்!

சினிமா தியேட்டர் முன் நின்று மறியல் செய்ததாகத் தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் 24—2—56ல் ஆரணி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை நடைபெற்று, அவர்களுக்குத் தலா ரூ. 2 வீதம் அபராதம் விதிக்கப்பட்டது; தோழர்கள் அபராதம் கட்ட மறுத்தனர். 'உங்களிடம் பின்னர் வசூலித்துக்கொள்கிறோம்' என்று சொல்லி விடுதலை செய்துவிட்டனர்.

வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள்:—கே. டி. அண்ணாமலை, பி. கண்ணன், எல். முனுசாமி, ஆர். வேலு, எம். துரைசாமி, மாணிக்கவேலு, கே. கே. நெடுஞ்செழியன், பி கிருஷ்ணன், பிரகாசம், ஜிக்கிரியா ஆகியோர்.

குத்தாலம்—நரசிங்கன்பேட்டை தோழர்களுக்கு 15 நாள் தண்டனை

தஞ்சை இரயில்வே மாஜிஸ்திரேட் தீர்ப்பு

பிப். 20-ந் தேதியன்று, குத்தாலம்—நரசிங்கன்பேட்டை பகுதிகளில் கைது செய்யப்பட்ட தோழர்கள் எம். அப்துல்ஹக், கே. எஸ் கண்ணன், வி. இராமதாஸ், ஏ. கலியமூர்த்தி, ஜி. குப்புசாமி, எம். தம்புசாமி, என். பி. ராசு, பி. சம்பந்தம் ஆகியவர்களுக்குத் தஞ்சை இரயில்வே மாஜிஸ்திரேட் தலா 15 நாள் தண்டனை விதித்தார்; தோழர்கள் தஞ்சை சப்-ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புஞ்சைத்தலையூர்:

புஞ்சைத்தலையூர் ரோடு பிரிவில் கைது செய்யப்பட்ட கீழ்க்கண்ட தோழர்கள் 9 பேர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாயும், 2—8—56ல் தாரையில் விசாரணை நடைபெறும் என்றும் தெரிகிறது

தோழர்கள் ஆர். சைனுமுகமது, கே. என். குமாரசாமி, வி. பெரியசாமி, கே. எம். அனீபா, என். முத்துச்சாமி, கே. எம். பெரியசாமி, எஸ். ராமசாமி, என். அய்யாச்சாமி, ஆர். கண்ணன் ஆகியோராவர்.

இடைப்பாடி:

இடைப்பாடியில் மொத்தம் 24 பேர்களை கைது செய்ததில் 23 பேர்களை விட்டுவிட்டு, தி. மு. க. தோழர் ஏ. மெய்வேல் என்பவர் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க போலீசார் முடிவு செய்துள்ளனர். தோழர் ஏ. மெய்வேல் சொந்த ஜாமீன் பேரில் விடப்பட்டிருக்கிறார்.

இந்தியாவில் கைத்தறித் துணி உற்பத்தி, 1954-ல் மொத்தம் 132 0 கோடி கெஜமாக இருந்தது 1955-ல் 145 0 கோடி கெஜமாகப் பெருகிவிட்டது.

★

சென்னையின் வரவு-செலவுத் திட்டம்

1956—57-ம் ஆண்டு மதிப்பீடு

சென்னை, பிப். 27—

1956—57-ம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் படி, இப்போதுள்ள வரி விதிப்புகளைக்கொண்டு ரூ 59 கோடியே 83 இலட்சம் வருமானம் கிடைக்கும்.

6 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவு ஆகும்.

ஆகவே, 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் துண்டு விழுகிறது.

புதிய வரிகள் மூலம் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் கிடைக்கிறது; எனவே, நிகரமாகத் துண்டு விழுவது 1 கோடியே 66 இலட்சம் ஆகும்.

20-ந் தேதி பொதுவேலை நிறுத்தம்:

படிப்பினை பகருவோர் பார்வைக்கு:

பொதுவேலை நிறுத்தம் பற்றி முதலமைச்சர் காமராசர் வெளியிட்ட முதல் அறிக்கையைக் கண்ட சர்வ கட்சி கூட்டணித் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள், 'தனிப்பட்ட முறையில் எனக்கு முழுத் திருப்தி அளிக்கிறது' என்று கூறினதாகவும், 'ஆனால் அவர் பேச்சை மற்றவர்கள் கேட்டதாக இல்லை; எனவே அவர் நிலைக்காக இரங்குகிறோம்,' என்றும் படிப்பினை பகரப்பட்டு இருக்கிறது.

ஆனால், உண்மையோ!

'ஜனநாயக முறைப்படி. முதலமைச்சர் அறிக்கை பாராட்டத்தக்கதாகும்; இருந்தாலும் இருபதாந் தேதி பொதுவேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றே தீரும்' என்று கூட்டணித் தலைவர் 18—2—56-ந் தேதி மதுரையிலிருந்து வெளியிட்டுள்ள கருத்தில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார் என்பது கருதத்தக்கது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28-2-56 செவ்வாய்

இந்தி பற்றி....!

'எவர்மீதும் இந்தியைத் திணிக்கமாட்டோம்' என்று, 'உறுதிமொழி' தருகின்றனர், வட நாட்டுத் தலைவர்கள்; ஆனல், அதேபோது, 'எங்கும்—இந்தியா முழுவதும் இந்தியைப் பரப்புவோம்' என்று பேசுகின்றனர்—இந்தி வெறியர்களுக்குத் தூபமிடுகின்றனர்—அதே வட நாட்டுத் தலைவர்கள்!

'இந்தியைப் பரப்புவது அவசியம்; இந்தி மொழியில் இலக்கியங்களை வளர்ப்பதும் அவசியம்' என்று இந்தியக் குடியரசுத் தலைவர், பீகார் 'ராஷ்டிர பாஷா பரீஷத்' ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

'இந்தி மொழி, இலக்கிய வளமற்றிருக்கிறது; அதனல் நல்ல இலக்கியங்களை அந்த மொழியில் தோற்றுவிக்க வேண்டும்; இந்தி பேசுவோர் ஒரே வகையான இந்தியைப் பேசுபவர்களாக இல்லை; ஆகவே, இந்தி பேசுவோர் நல்ல இந்தி பேசுவதற்காகவாவது இந்தியைப் பரப்ப வேண்டும்' என்று பேசியிருக்கிருரா, குடியரசுத் தலைவர் என்ருல், இல்லை.

'இந்தி பரவ வேண்டும்; இந்தி மொழியில் இலக்கியம் வளர வேண்டும்' என்பது எதற்காக என்ருல், 'இந்தி மொழிக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் இடத்தை அது பெறவேண்டுவதற்காகத்தான்' என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிருர்.

இந்தி மொழிக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள இடம் என்ன?

இப்போது இந்திய அரசாங்கத்தில் ஆங்கிலத்திற்கு எந்த இடம் தரப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தை இந்தி நிரப்ப வேண்டும்; அதுதானே?

'அது கூடாது; ஆங்கிலம் உள்ள இடத்தில் இந்தியை இருத்தக்கூடாது' என்பதைத் தெளிவாக தமிழ் நாட்டுத் தலைவர்கள் கடந்த ஜனவரித் திங்கள் 28-ம் நாள் விளக்கியிருக்கிருர்கள்.

'மாநிலங்களின் நிர்வாகம் அந்தந்த வட்டார மொழிகளிலேயே நடைபெறவேண்டும்; மாநிலங்கள் ஒன்றுக்கொன்றும், மாநிலங்கள் மத்திய சர்க்காருடனும் தொடர்பு கொள்ளுவதற்கும், இந்தியப் பேரரசின் எல்லா நிர்வாகத்துறை அலுவல்களுக்கும், ஆங்கிலமே பொது மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும்' என்பதைத் தமிழகத் தலைவர்கள் திட்டமாக எடுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

டெல்லி சர்க்காருக்கு, இந்த தமிழ் நாட்டின் தீர்மானம் உரிய காலத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; ஆனல், அந்தத் தீர்மானத்தை அறிந்தும் அறியாதவர்போல, குடியரசுத் தலைவர், 'பழைய பல்லவி'யையே திரும்பவும் பாடியிருப்பதுடன், இந்தி பரப்பப்படவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தியிருக்கிருர்.

இந்தி மொழியை எப்படியும் ஆங்கிலம் இருக்கும் இடத்தில் நிரப்பிவிடுவது என்ற வடநாட்டு இந்தி வெறியர்களின்—ஏகாதிபத்தியவாதிகளின் முடிவைப் பிரதிபலிக்கிறது, குடியரசுத் தலைவரின் பேச்சு!

'இந்தியைத் திணிக்கமாட்டோம்' என்று பேசுகிற டெல்லி ஆட்சியாளர்கள், இந்தி மொழியை நிர்வாகத் துறை அனைத்திலும் சிறிது சிறிதாக, அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் காலக் கெடுவையும் மீறித் திணித்து வருவதை நாம் காண்கிருேம்.

டில்லி அரசாங்க ஊழியர்கள் இந்தி மொழி அறிவு பெறுவதற்காக டில்லி சர்க்கார் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி நேற்று முன்தினம் செய்தி வந்தது. இரயில்வே, தபால்—தந்தி முதலிய இலாகாக்களின் நடவடிக்கைகளும் நாம் அறிந்தவைதான்; என்ருலும், டில்லியாளர்கள் இந்தியைத் திணிக்கவில்லை என்று பேசுவது கண்டு நாம் உண்மையில் மனவேதனையுறுகிருேம்.

'வடநாட்டவர் தென்னுட்டு மொழிகளைக் கற்கவேண்டும்,' என்று வடநாட்டு பெரிய மனிதர்கள் சிலர் அடிக்கடி கூறி வருகின்றனர்.

வடநாட்டவர் தென்னுட்டு மொழிகளைக் கற்றுக் கொள்வதினல் மட்டும், இந்தி தென்னுட்டவர்மீது திணிக்கப்படுவதினல் ஏற்படும் ஆபத்துக்களும், கொடிய விளைவுகளும் எந்த வகையால் தவிர்க்கப்படுவதாக ஆகும்?

வடநாட்டவர் தென்னுட்டு மொழிகளைக் கற்றுக்கொள்வதினலேயே தென்னுட்டு மொழிகளுக்கு இப்போது இல்லாத—இப்போது தர மறுக்கப்படுகிற புதிய சிறப்பு எதும் கிடைத்துவிடப்போவதுஇல்லை; ஆனல், இந்தி மொழியை தென்னுட்டவர் கற்க வேண்டுமென்பது அப்படி அல்லவே!

இந்த வேறுபாட்டை அறியாத தென்னுட்டவர் இல்லை என்பதை அந்த வடநாட்டுத் தலைவர்கள் உணர்ந்தால் நல்லது.

60 ஆண்டுகளாக

சச்சரவேதும் எழாத கிராமம்

அகமதாபாத்—

65 பேர் கொண்ட கிராமம் ஒன்றில், கடந்த 60 ஆண்டுகளாக சண்டை ச்சச்சரவுகள், எதும் இருக்கவில்லையாம்!

கிராம மக்கள் தங்களுக்கு ஏற்படும் தகராறுகளைத் தாங்களாகவே தீர்த்துக்கொண்டதால் நீதி மன்றத்திற்கு எந்த ஒரு வழக்குமே எடுத்துச் செல்லப்படவில்லையாம்.

சாகெப்ஜிஞ—மூவாடா என்ற கிராமம்தான் இந்தப் பெருமைக் குறியதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கிராமத்திற்குப் பஞ்சாயத்து சபை கிடையாது என்றும், என்ருலும் இங்கு கடந்த இரண்டாண்டுக் காலத்தில் கிராம மக்களின் ஒன்றுபட்ட செயலினல் ரு. 32,000 பெறுமான அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருப்பதாயும், அதில் ரு 10,000 வரை அந்தக் கிராம மக்களே தந்திருப்பதாயும் கூறப்படுகிறது.

கைத்தறியாளருக்கு நிரந்தர பாதுகாப்பு வேண்டும்

அரக்கோணம் கைத்தறி வார விழாவில் என். வி. நடராசன் கருத்துரை

25—2—56 அன்று அரக்கோணம் ஸ்டுவர்ட்ஸ் பேட்டையில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில், அனைத்திந்திய கைத்தறி வார விழா சிறப்புற திரு. சதாசிவ அய்யர் பி.ஏ.,பி.எல். தலைமையில் நடைபெற்றபோது தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆற்றிய சொற்பொழிவின் விவரம் வருமாறு:—

"கைத்தறி நெசவாளர்கள் வாழ்விழந்து தவித்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய தொண்டினை எவரும் மறக்கவோ அல்லது மறுக்கவோ இயலாது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமுன் இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் விற்பனையாகாமல் தேங்கியிருந்தும், அதனல் நெசவுத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் அறிந்ததேயாகும். அந்த நெருக்கடியிலிருந்து நெசவுத் தொழிலாளர்களை மீட்கவும், ஓரளவு அவர்களுக்கு வாழ்வளிக்கவும் தி. மு. கழகம் எடுத்துக் கொண்ட முயற்சியை அரசியலாரே பாராட்டியிருப்பதை இச்சமயம் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த விவரங்களையெல்லாம் கூறுவதால் தி. மு. கழகத்தின் பெருமையை இங்கே கூறி 'தித்தாப்பு'க் காட்டிக்கொள்வதற்காக அல்ல.

சென்னையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற கைத்தறி வார விழாவில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில், சில உருப்படியான யோசனைகளை—வேண்டுகோளை விடுத்தார்கள்; அதனை சென்னை அரசியலாரும், அனைத்திந்திய கைத்தறிவார விழாக் குழுவினரும் கவனித்து ஆவன செய்யாதது குறித்து வருந்துகிருேம்.

இன்று நாடெங்கும் நடைபெறும் இக்கைத்தறிவார விழா ஏதோ வைதீகத் துறையில் நடத்தப்படும் விழாக்கள் அல்ல என்பதை நீங்கள் அனைவரும் மனமார ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகிறேன். ஆதலால், இந்த விழா கொண்டாடப்படுகிறதென்ருல், இதன் மூலம் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உற்சாகமும், அதுபோன்றே நல்ல பலனும் ஏற்படவேண்டும்.

இதை விவரித்துத்தான் அண்ணு அவர்கள் இவ்விழாவைப் பொங்கல் பண்டிகைக்கு ஒரு திங்களுக்கு முன்னதாகவோ, அல்லது வைதீக எண்ணத்துடன் நடத்த வேண்டுமென நிர்ப்பந்தம் இருக்குமானல் தீபாவளிப் பண்டிகையை யொட்டியேனும் இவ்விழா நடத்தப்படுமானல், பல இலட்ச ரூபாய்களுக்கு கைத்தறி ஜவுளி விற்பனையாவதுடன், பொதுமக்களுக்குக் கைத்தறித் துணிகளை அணிய வேண்டுமென்ற ஆர்வம் மிகுதியாக உண்டாகுமென்றும் வற்புறுத்திக் கூறினர்கள்.

அண்ணு அவர்கள் கூறிய இந்த யோசனையை அன்று விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை மேயரும், விழாவில் கலந்துகொண்ட காங்கிரஸ் தலைவர்களும்கூட மனமார ஆதரித்துப் பேசினர்கள். அது மட்டுமல்லாமல், அன்று திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் மனமார வரவேற்றனர்.

அண்ணு அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன; ஆனல், விழா ஏதோ 'தமாஷா' காட்சிகளைப்போல இந்தத் திங்களில் நடைபெறுகிறது; எனவே, அடுத்து நடைபெறும் கைத்தறிவார விழாவாகிலும் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக நடத்தினல் இந்த விழாவுக்காகச் செலவழிக்கப்படும் இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஏற்ற ஓரளவு பலனாவது கிடைக்கும்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களின் அவலநிலைமையைப் போக்க அரசியலார் கையாளும் முறையிலும் உடனடி மாற்றம் வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

'ரிபேட்' என்ற பெயரால் ரூபாய்க்கு 0—1—6 வீதம் சலுகை தரப்படுகிறது. கைத்தறி வார விழாக்களைப் போன்ற குறிப்பிடத்தக்க சமயங்களில் 0—2—0 ஆக தரப்படுகிறது. இப்படிக் காட்டும் சலுகையினல் கைத்தறி ஜவுளியின் விற்பனை பெருகச் செய்யுமென்றும் எண்ணப்படுகிறது.

இவ்வாறு செய்யப்படும் உதவிகள் அவசியமற்றது என நாங்கள் கூறவில்லை; ஆனல் இவ்வித உதவிகளாலேயே கைத்தறி நெசவாளர்களின் குறையை நிரந்தரமாகத் தீர்த்துவிடலாம் என்று அரசியலார் கருதுவார்களேயானல், அது நெசவுத் தொழிலாளர்களை மனமார ஏமாற்றுவதற்கே ஒப்பாகும்; அல்லது வெறும் கண் துடைப்பு காரியமாகவே முடியும் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூடுமான வரையில் என்றைக்கும் தொழில் கிடைக்க வேண்டுமென்ருல், முன்னுள் முதலமைச்சர் ஆச்சாரியார் அவர்களின் திட்டப்படி. கலர் சேலைகளையும், 20 முதல் 60 நம்பர் வரை வேட்டிகளையும் கைத்தறியில் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ற உத்திரவை சட்டபூர்வமாகச் செயல்படச் செய்ய வேண்டும் என்பதே எங்களின் மனப்பூர்வமான வேண்டுகோளாகும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அரசியலார் அளித்திடும் உதவிகள் ஏதோ பிச்சையிடுவதுபோலவோ அல்லது தர்மம் செய்வதுபோலவோயிருத்தல் கூடாது; அவர்களின் உழைப்பிற்கேற்ற உரிமையை அளிப்பதாய் இருத்தல் வேண்டும்; அத்தகைய திட்டம் தான் நீடித்துமிருக்க முடியும்.

அன்று முதலமைச்சராயிருந்த ஆச்சாரியார் கொண்டுவந்த திட்டம் சட்டசபை உறுப்பினர்களாலும், மற்றும் எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது, என்ருலும் அத்திட்டத்தை செயல்படுத்த நம் மாநில சர்க்காருக்கு அதிகாரமில்லை.

இந்திய அரசியலார் அருள் கூர்ந்து ஆசீர்வதித்தால்தான் எந்தத் திட்டமும் நடைமுறைக்குவர முடியும்; ஆதலால், ஆச்சாரியாரின் திட்டம் குப்பைத் தொட்டியில் வீசி எறியப்பட்டது. மாநில மக்களின் ஒருமித்த எண்ணத்தை உடனே நிறைவேற்றுவதற்கு மாநில சர்க்காருக்கு அதிகாரமில்லை! இதைக் கைத்தறி நெசவாளர்களாகிய இங்கே கூடியுள்ள நீங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். நான் இந்திய அரசியலாரின் போக்கைப் பற்றி இந்தக் கூட்டத்தில் மேலும் விவரித்துப் பேசுவது முறையாகாது என்பதை நன்கு உணர்ந்தவன்; ஆதலால் இக்கூட்டத்தில் எந்த அளவுக்கு எடுத்துக் கூற முடியுமோ அதனைமட்டும் நினைவூட்டியிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள், தொழிலின்றி பாதிக்கப்படுவதற்கு மற்றுமோர் காரணம், போதிய நூல் சப்ளை இல்லாத பெருங்குறை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்; ஆனல், நூற்பற்ருக்குறையைப் போக்குவதற்கு வழிவகை என்ன? அதனை அரசியலார் செய்ய முன்வந்தார்களா? 'மில் முதலாளிகளே! நீங்கள் கைத்தறி நெசவுக்குத் தட்டுப்பாடில்லாமல் நூல் சப்ளை செய்ய வேண்டும்' என்று அறிக்கை மூலம் உத்திரவிட்டால் போதுமா? அதனை எத்தனை முதலாளிகள் மதித்து நடக்கிருர்கள் அல்லது அவ்விதம் நடக்கும்படி சர்க்கார் தான் என்ன நிர்ப்பந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டனர் என்று கேட்கிறேன்.

ஆகவே, ஆலைகளிலிருந்து நூல் சப்ளை செய்வதில் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்; அல்லது கைத்தறி நெசவுத் தொழிலுக்கு மட்டுமே நூல் சப்ளை செய்ய நூற்பு மில்கள் தமிழகத்தில் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். தற்போது சென்னை ராஜ்ய கைத்தறி போர்டு பொதுமக்களின் துணைகொண்டு ஏறத்தாழ 45 இலட்ச ரூபாய் செலவில் நூற்பு மில் ஒன்றை அமைக்கப்போவதாகத் தெரியவருகிறது. அதற்காக சென்னை சர்க்கார் கூட 10 இலட்ச ரூபாய் உதவப் போகிருர்களாம்.

இந்த 10 இலட்சம் ரூபாய் உதவி செய்வதைவிட சென்னைச் சர்க்காரே முழு செலவையும் ஏற்று, குறைந்தது இரண்டு ஆலைகளையாவது அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி வாரவிழாவுக்காக செலவிடப்படும் இலட்சக்கணக்கான பணத்தை இந்த உருப்படியான காரியத்துக்கு பயன்படுத்துவார்களானல், கூடுமானவரை நெசவாளர்களுக்கு நூல்தட்டு ஏற்படாது என்பதையும் அரசியலார் உணர வேண்டுகிறேன்.

நான் இவ்வாறு கூறுவதால், சென்னை அரசியலார் கைத்தறி நெசவாளர் குறித்து யாதொரு அக்கரையும் மேற்கொள்ளவில்லை என்று குற்றம்சாட்டுவதாக எவரும் கருதிவிட வேண்டாம். ஆனல், கைத்தறி நெசவாளர்களுக்கு நாங்களும் ஏதோ செய்தோம் என்ற அளவுடன் நில்லாமல் இடைவிடாத தடைப்பு இல்லாமல் அவர்களுக்கு நிரந்தர வாழ்வளிக்கும் வகையில் திட்டம் வகுத்து அதையும் உடனடியாக நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய எங்களின் எண்ணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, கைத்தறி நெசவாளர்களாகிய நீங்கள் உடன் அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்

(3-ம் பக்கம் பார்க்க).

அறுவடையையும் நிறுத்தி விவசாயப் பெருமக்கள் அர்த்தாலில் கலந்துகொண்டனர்

பிப். 20-ல் தமிழகம் திரண்ட காட்சி

தமிழகம் கண்டறியாத பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு கடந்த பிப். 20-ல் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்த மகத்தான சம்பவம், தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற்றுள்ள விபரங்கள் நமக்குக் கிடைத்தவண்ணமுள்ளன; அவற்றினை முடிந்தவரையில் சுருக்கித் தந்து வருகிறோம்.

சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள் எல்லாம் வேலைக்குச் செல்லாதிருந்திருக்கின்றனர்; அறுவடைகூட அன்று பல ஊர்களில் நடைபெறவில்லை.

பொங்கிவழிந்த ஆர்வத்தோடு, பிப். 20—பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை இந்த நிகழ்ச்சிச் சுருக்கங்கள் சொல்லுகின்றன.

வத்திப்பட்டி

தோழர் அ. சையது முகம்மது தலைமையில் அமைதியாக கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் நடைபெற்றது. தோழர்களைப் பாராட்டி பகுத்தறிவுப் பூங்கா செயலாளர் நன்றி தெரிவிக்க கூட்டம் அமைதியாகக் கலைந்து சென்றது.

பத்தமடை

விவசாயிகளும், தொழிலாளர்களும், வியாபாரிகளும் அர்த்தாலில கலந்துகொண்டனர். சின்னஞ்சிறு கடைக்காரர்களும்கூட கடையடைப்புச் செய்தனர்

சிலையம்பட்டி

இங்கு எல்லாக் கடைகளும் மூடப்பட்டு, அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

வட்டத்தூர்

காலை 6 மணிக்கு தி மு கழகத் தோழர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஊர்வலமாகச் சென்றனா. விவசாயிகள் வேலைக்குச் செல்லவில்லை; கிளப்புகள், மளிகைக் கடைகள் திறக்கப்படவில்லை; போர்டு பள்ளிகு மாணவர்கள் செல்லவில்லை

சவ்வாதுபட்டி

முழு அர்த்தால் நடைபெற்றது பல சரக்குக் கடையினரும், சிற்றுண்டி விடுதியினரும் எவ்வித மறுப்பும் கூறாது ஒத்துழைத்தனர்

கெங்கைகண்டான்

பாண்டியூர் கிளைக் கழகத் தோழர்களின் முயர்சியால் கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டு அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது.

மீன்சுருட்டி

கடைகள், நெல் அரைக்கும் ஆலைகள் யாவும் திறக்கப்படவில்லை; பள்ளி மாணவர்கள அமைதியான முறையில் அர்த்தால் நடத்தினர் 500 மாணவரில் ஒருவர் கூட பள்ளி செல்லவில்லை.

இரவிபுதூர்

இரவிபுதூர், திருவஞ்சிநல்லூர், மருங்கூர், தோப்பூர, இராமனுதிச்சன்புதூர் முதலிய ஊர்களில கடைகள், உணவு விடுதிகள் அடைக்கப்பட்டு முழு அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. காலை 6½ மணிக்கு சண்முகானந்தா நூலகிலையத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பித்து மேலே குறிப்பிட்ட ஊர்களுக்குச் சென்று சமதர்ம வீதியை அடைந்ததும் நடைபெற்ற கூட்டத்தில் உறுதிமொழி எடுத்தபின் 11 மணிக்கு கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

சேத்துப்பட்டு (வ. ஆ.)

பொது வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. பஸ் முதலாளிகள் ஒத்துழைப்பால் பஸ்கள் ஓடவில்லை; பஸ் தொழிற்சாலைகளும் இயங்கவில்லை; அரிசி மில்களும் ஓடவிலலை; சினிமாக்காட்சியையும நிறுத்திவிட்டனர். மாலை 4 மணிக்கு தோழர். சி. டி கோவிந்தன் தலைமையில் முக்கிய வீதிகளின் வழியாக மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

திருச்சுளி

இதுவரையில் கண்டிராத அளவில், காப்பி கிளப், உணவு விடுதிகள் உட்பட எல்லாக் கடைகளும் மூடப்பட்டு அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது.

கரியணம்பட்டி

அர்த்தால் அமைதியான முறையில் நடைபெற்றது. ஊரில் ஒரு மாத காலத்திற்கு 144 தடைவிதிக்கப்பட்டிருந்ததால் கூட்டம் நடத்த ஊர்வலம் செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனர். பண்ணைப்புரம் சர்வகட்சி கமிட்டியுடன் தி. மு. கழகத் தோழர்கள் சேர்ந்து தடையை மீறி ஊர்வலம் சென்ற தோழர்கள் ஆர். திருமலைசாமி, எம் இராசன், எம். ஆர். வி. பாண்டியன், பி வி காமராஜ் எம். கருப்பண்ணன், வீ. ராமதாசு, கிருஷ்ணசாமி, பெருமாள், தி வீரையன், பாலசுந்தரராசு ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

புதுகும்மிடிபூண்டி

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன வியாபாரிகளைப் போலீசார் கடைகளைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டும், கடைகளைத் திறக்க மறுத்துவிட்டனர். வெற்றிகரமாக பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது.

பெரம்பலூர்

மாபெரும் ஊர்வலத்திற்குப் பின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் அருணாசலம் தலைமையில், ஆர் சுந்தரராசன், எஸ். மன்னர்மன்னன், டி. சி. எஸ். மணி, ஆர். நாராயணசாமி ஆகியோர் பேசினர். பொதுவேலை நிறுத்தம், கடையடைபபு அமைதியாக நடைபெற்றது.

கீரனூர்

ஊரில் முழு கடையடைப்புச் செய்யப்பட்டது. மாலை ஊர்வலத்திற்குப் பின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் குருசாமி, காசு. சேரன் பேசினர் கூட்டம் உறுதிமொழியுடன் கலைந்தது. ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ம. சை மு. முகமது சுல்தான் அவர்களின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது.

பட்டிவீரன்பட்டி

பிப். 19-ந் தேதி இரவு சுமார் 12½ மணிக்கு 22 தி மு கழகத் தோழர்களை அவரவர்கள் வீட்டில் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள்; இரவு 2 மணிக்கு கூட்டம் நடத்த சர்கிள் இன்ஸ்பெக்டரிடமிருந்து அனுமதி வாங்கிக்கொண்டு பழனியிலிருந்து வந்துகொண்டிருந்த தோழர்கள் ஐந்து பேரையும் திண்டுக்கல் பாதையில் கைது செய்து, திண்டுக்கல் சப்-ஜெயிலில் வைத்தார்கள்; 20-ந் தேதியன்று படடிவீரன்பட்டியில் கைதானவர்கள் 102 பேர் எனத் தெரியவருகிறது. என்றாலும், அர்த்தால அமைதியாக நடைபெற்றது. மாலை முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்து, தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நடராசன், இராமச்சந்திரன், எஸ் சி சங்கரபாண்டியன் ஆகியோர் பேசினர்.

பாபநாசம்

இவ்வூர் வர்த்தக சங்கத்தினர் கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் செய்தனர். கடைகள் யாவும் மூடப்பட்டு முழு அர்த்தால் நடைபெற்றது.

கல்லக்குடி

கடைகள் அனைத்தும் அர்த்தாவில் ஈடுபட்டன; உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 400 பேர் பள்ளிக்குச் செல்லவில்லை. (வடுகர் பேட்டை) கல்லுடைக்கும் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். மாலை 5½ மணிக்கு தொழிற்சாலை அருகிலிருந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு பொதுக்கூட்டம் நடவிருந்த இடலுக்கு வந்து சேர்ந்தது. மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் தோழர் அதியமான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். கந்தசாமி, வரதராசன், வளர்மதி, செங்குட்டுவன், இராமலிங்கம் ஆகியவர்கள் பேசியபின், இரவு 8 மணிக்கு உறுதிமொழி எடுத்து கூட்டம் முடிவுற்றது.

19-ந் தேதி இரவு 10½ மணியளவில் தி. மு. கழக செயலாளர் அ. தம்புசாமி போலீசாரால் கைது செய்யப்பட்டு 21-ந் தேதி விடுதலை பெற்றார்.

திமிரி

பீடித் தொழிற்சாலைகள், சோப்பு பேக்டரிகள் தோல் பதனிடும் ஷாப்புகள், பொதுத் தொழில்கள், சினிமாக் கொட்டகைகள் முதலியன முழுப் பொதுவேலை நிறுத்தம் செய்தனர். மாணவர்கள் பள்ளிக்கு செல்லவில்லை; நெசவுத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

திருவண்ணாமலை

பென்னாத்தூரில் 20 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். தோழர் ப. உ. சண்முகத்திற்கு 10 நாட்களுக்கு ரிமாண்டு கொடுத்திருக்கிறார்கள்.

கைத்தறியாளருக்கு......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்ன வேண்டியதென்னவெனில்,

கைத்தறி நெசவாளருக்கென்று தனி நூல் நூற்பு ஆலைகள் அமைத்தல்;

கலர் சேலை—20 முதல் 60 நெம்பர்வரை வேட்டி ஆகியவைகளை கைத்தறி நெசவுக்கென்று ஒதுக்க வேண்டுதல்;

கைத்தறி வார விழாவை பொங்கல் பண்டிகைக்குமுன் நடத்துதல்;

என்ற கோரிக்கைகளை இக்கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்து, அடுத்த ஆண்டு விழாக் கூட்டத்தில் இக்கோரிக்கைகள் நிறைவேறிற்று என்ற நற்செய்தியை அறிவிக்கும் வகையில் பணியாற்ற கைத்தறி செசவாளர்களும், கைத்தறி போர்டு நிர்வாகிகளும் முனைய வேண்டுகிறேன். இத்தகு முயற்சியில் தி. மு. கழகம் தனது ஒத்துழைப்பைப் பெரிதும் அளிக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக பொதுமக்களையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், கூடுமான வரை கைத்தறி ஆடைகளையே அணிதல் வேண்டும் இதில் கட்சி, ஜாதி, மத வித்தியாசங்களை பாராட்ட வேண்டிய அவசியமுமில்லை. எனவே, மேல்நாடுகளிலெல்லாம் கைத்தறித் துணிக்கு ஆதரவு பெருகிவரும் இக்நிலையில், தமிழ் மக்களாகிய நாம் கைத்தறியின் பெருமையையும் அதனை ஆதரிக்க வேண்டியதின் அவசியத்தையும் நீங்கள் உணர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

அலங்காநல்லூர்

அலங்காநல்லூர், புதுப்பட்டி, அழகாபுரி, கோவிலூர், மேலச்சின்னனம்பட்டி, கொண்டயம்பட்டி, ஆதனூர், ஐயூர், கல்லணை ஆகிய எல்லாப் பகுதிகளிலும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. அலங்காநல்லூரின் சரித்திரத்திலேயே இதுபோன்ற வேலை நிறுத்தமும், கடையடைப்பும், அநேகர் கைதானதும் இதுவே முதல் தடவை.

சினிமாக் காட்சி நடைபெறவில்லை; நாணுவிதக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; இரண்டு அரிசி மில்களும் ஓடவில்லை; பள்ளி மாணவர்கள் பலர், திரும்பி வீடு சென்றனர்; வயல்களிலெல்லாம் கதிர்கள் அறுக்கப்படவில்லை; கரும்பாலைகள் ஓடவில்லை; முதல் நாள் அறுத்த அறுவடையில் நின்ற அரைகுறை நெற் கதிர்களெல்லாம் அப்படியே வயல் வெளிகளில் தேங்கிக் கிடந்தது; களங்களில் பாதி வேலையுடன் கிடந்த நெற்களும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பஸ்களில் பிரயாணிகள் இல்லை என்றாலும் வெறும் பஸ்களாகவே அநேகம் ஓடின; எனினும், ஓரிரு பிரயாணிகள் செல்வதைச் செல்ல வேண்டாமெனக் கூற பஸ்ஸின் அருகில் சென்ற பல குழுக்களாக 45-க்கும் அதிகமான பேர்கள் கைதாயினர்.

அலங்காநல்லூரில், தி. மு. க. தோழர்கள் என. இராமச்சந்திரன், எ. வேணுகோபாலன், சி. வி. சின்னச்சாமி, எஸ். நாகரத்தினம், எம். பாண்டி, சாலமுத்து ஆகியவர்களும், பி. சோ. கட்சியைச் சேர்ந்த தோழர் கே. கருப்ப (பிள்ளை), வெள்ளையத் தேவர், பொன்னுச்சாமி, சந்தான தேசிகர் அழகப்பன், சங்கு, கோவிந்தன், இராசப்பா, சுப்பையா, முத்து, அழகுமலை ஆகியோரும் கைதாயினர். கொண்டயம்பட்டியில் தி. மு. கழகத் தோழர்கள் உதயகிரி தலைமையில் ஆறு பேர் சோழவந்தானில் கைதாயினர். வே. வெள்ளைச்சாமி தலைமையில் ஐந்து பேர் கைதாயினர்.

தோழர் கருப்புச்சாமி தலைமையில் ஆறு பேர் வத்தலக்குண்டில் கைதாயினர்.

மேலச் சின்னனம்பட்டி தி. மு க. தோழர்கள் வே. பழனிச்சாமி தலைமையில் ஐந்து பேர் கைதாயினர். தோழர் கந்தசாமி தலைமையில், கருத்தக் கண்ணன் முதலிய ஆறு பேர் சோழவந்தானில் கைதாயினர்.

போலீசார் தோழர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்தனர். அடித்ததால் பலருக்கு கைகால்களிலெல்லாம் காயங்கள் ஏற்பட்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டவர்களில், தோழர்கள் என். இராமச்சந்திரன் கே. கருப்ப பிள்ளை, வெள்ளையத் தேவர், வேணுகோபாலன், சந்தான தேசிகர், பொன்னுச்சாமி, வே. பழனிச்சாமி, கோ. வெள்ளைச்சாமி ஆகியோரை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை விடுவித்தனர். விடுவிக்காதவரின் மீது வழக்குப் பதிந்து நிலக்கோட்டைக்கு கொண்டுச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் 21-ந் தேதி மாலை 5 மணியளவில் மாஜிஸ்டிரேட் அவர்களால் யாதொரு நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

சோழவந்தான்

முழு அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது பஞ்சாயத்துத் தலைவர் உள்பட சில காங்கிரஸ்காரர்கள் பயமுறுத்தியும் பணியாது கடைக்காரர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் பொது மக்கள் அனைவரும் அர்த்தாலில் கலந்துகொண்டு, சிறப்புறச் செய்தனர். மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு வைகையாற்றுக் கரையை வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலூர்

கடைகள் எல்லாம் மூடி இருந்தன; வாரத்துக்கு ஒரு நாள் கூடும் சந்தையும் கூடவில்லை.

ஆரம்பப் பள்ளி கூடத்தில் பெரும்பாலான மாணவர்கள் செல்லவில்லை. காங்கிரசுப் பிரமுகர்கள் கடைகளைத் திறக்கச் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியாக முடிந்தது. மாலை 3 மணிக்கு முனியாண்டி கோவில் திடலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஊர்வலமாக புறப்பட இருந்தார்கள். அப்பொழுது எதிர்பாராதவிதமாக தோழர் கண்ணதாசன் அங்கு வந்து சேர்ந்தார்; கூட்டணித் தலைவரும், ஆயிரக்கணக்கான மக்களும் கைதட்டி அவரை வரவேற்றனர்.

தோழர் கண்ணதாசன் தலைமையில் சிறிது தூரம் ஊர்வலம் வந்தது; பிறகு தோழர் கண்ணதாசன் விடைபெற்று மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஊர்வலம் கடை வீதிகளின் வழியாகச் செல்வதற்கு சர்க்கிள் அனுமதிதர மறுத்துவிட்டார். பின்னர் ஊர்வலம் மந்தை மைதானத்தை வந்து அடைந்தது.

தோழர் எ. வேலுசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர்—தலைவர் உறுதிமொழியை வாசிக்கவும் கூட்டம் முடிவுற்றது.

ஆரணி (செங்கற்பட்டு மாவட்டம்)

ஆரணி சரித்திரத்திலேயே நடந்திராவண்ணம் பொது வேலைநிறுத்தம் அமைதியாக—வெற்றிகரமாக நடந்தேறியது. கடைகளெல்லாம் மூடிக்கிடந்தன; நெல் அரிசி போன்ற தானியங்கள் அரைக்கும் 'மில்'களெல்லாம் மூடிக்கிடந்தன; போக்கு-வரத்துச் சாதனங்கள் செயலற்றுக் கிடந்தது; ஒரே மயான அமைதி இங்கு நிலவியிருந்தது.

காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் அர்த்தாலை முறியடிக்க முயற்சித்தும்கூட, பலன் ஏதும் அவருக்குக் கிடைக்கவில்லை. காலை சுமார் 9 மணியளவில், தோழர் பெத்தய்யா தலைமையில் ஆயிரக்கணக்கில் பொதுமக்களடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியே சென்றது. மாலை 6 மணிக்கு, பிள்ளையார் கோயில் முன்பாக தோழர் பெத்தய்யா தலைமையில் தோழர்கள் பா. சு. மணி (தி மு.க.), பாட்சா ஆகியோர் பேசினர். இறுதியாக உறுதிமொழி வாசிக்கப்பட்டு, பெருத்ததோர் ஆரவாரத்தின் மூலம் மக்கள் அதனை இன்முகத்துடன் ஏற்றனர்.

திருப்புத்தூர்

இவ்வூரில் முழு அர்த்தால் நடைபெற்றது. மாலை 4 மணியளவில், ஆயிரக்கணக்கான மக்கள் அணி வகுத்து, நகரின் பல பகுதிகளிலும் ஊர்வலமாகச் சென்று கருணாநிதி படிப்பகத்தின் முன்வந்தனா. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு கூட்டணித் தலைவர் தோழர் பி. இராமையா தலைமை தாங்கினார். தோழர்கள் வி. நூர் முகம்மது, கா. காத்தமுத்து, சே. சண்முகம் ஆகியோர் பேசினர். பின்னர், உறுதிமொழி எடுத்தபின் கூட்டம் கலைந்தது.

குன்னூர், ஆர். எஸ்.

பெரும்பாலான வணிகர்கள் கடைகளை அடைத்திருந்தனர். 'கிலேண்டேல் எஸ்டேட்'டில் 10,58 தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்; பென்காம் எஸ்டேட்டிலும் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனர். வாடகைக்காரர்களும், லாரிகளும் நிறுத்தப்பட்டன.

மாலை 3-30-மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் அண்ணா திடலில் தோழர் இராசன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் வி. கா. ஒளியழகன், காராயணன், அப்பன் பேசினர்; தலைவரால் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மக்களைப் பாதிக்கும் வரிகள் அமுல்

ஆசிரியர்கள் ஏமாற்றமடைகின்றனர்

சென்னை, பிப். 28 —

சென்னை மாநில சர்க்காரின் வரவு-செலவுத் திட்டம், இந்த ஆண்டிலும் துண்டுவிழும் திட்டமாகவே அமைந்திருப்பது நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பிடிப்பில் சிக்கிக்கிடக்கும் தென்னாடு, கோடிக்கணக்கான ரூபாயை ஆண்டுதோறும் டில்லிக்குக் 'கப்பமாக'க் கட்டிக்கொண்டிருக்கும் வரை, தென் மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டத்தில் தெளிவான மாறுதல்களைக் காண்பதற்கில்லை என்பதை நாம் நன்கறிவோம்.

வழக்கம்போல வடநாட்டின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டான கவர்னர் பெருமானுக்கு இந்த மாநில மக்களின் வியர்வைத்துளிகள்—பல இலட்சம் ரூபாய் பெறுமான தொகை கோட்டிக்கொடுக்கப் படுகிறது.

வெகு பிரமாதமாக—ஆர்ப்பாட்டமாக விளம்பரப்படுத்தப்படும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை சென்னையின் வரவு-செலவுத் திட்ட மூலம் நோக்கும்போது, இரண்டாம் திட்டம் சென்னைக்கு எந்த ஒரு உருப்படியான பலனையும் தரப்போவதில்லை என்பதும் தெரியவருகிறது.

வெகு அதிகமாக ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய புதிய வரி விதிப்புகள், நான்கு இனங்களில் அமுல் செய்யப்படும் என்றும் திட்டம் தெரிவிக்கிறது.

'காமதேனு' என்று வர்ணிக்கப்படும் விற்பனை வரி. சர்க்கரைக்கு அதிகமாக்கப்படவிருக்கிறது.

டீசல் எண்ணெய்க்கு விதிக்கப்படும் உபரி வரி உயர்த்தப் படுகிறது.

மின்சார விநியோகக் கட்டணமும் உயர்த்தப்படுகிறது.

மொத்தமாக புதிய வரி விதிப்புகள் மூலம் ரூ. 1·55 கோடி கிடைக்கும்; என்றாலும், துண்டுவிழும் தொகை ரூ. 1·66 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரெவின்யூ துறையில் மொத்த வருமானம் ரூ. 60·77 கோடி என்றும், செலவு ரூ. 62·43 கோடி என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

புது வரி விதிப்புகள்:

1. 'டீசல்' எண்ணெய்க்கு காலன் ஒன்றுக்கு விதிக்கப்படும் வரி ஒன்றரை அணாவிலிருந்து நான்கணாவாக உயர்த்தப்படுகிறது; இதன் மூலம் சுமார் 30 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும்.

2. எதாவது ஒரு வசதியான கட்டத்தில் சர்க்கரை விற்பனை மீது ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா மேலும் வரி விதிக்கப்படுகிறது; இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் கிடைக்கும்.

3 மின்சார 'சப்ளை' கட்டணம் 30 சதவிகிதம் உயர்த்தப்படுகிறது; சென்னை சர்க்கார் மின்சார இலாகா மூலம் மின்சாரம் பெறுவோருக்கு இந்தக் கட்டண உயர்வு அமுலாகாது. இரயில்வே இலாகாவிற்கு இந்தக் கட்டண உயர்விலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. உற்பத்தி துவங்கி மூன்றாண்டுகள் வரைக்கும் புதிய தொழிற்சாலைகளுக்கும் இந்தக் கட்டண உயர்வு விதிக்கப்படாது. மின்சாரக் கட்டண உயர்வினால் ரூ. 45 இலட்சம் ஆண்டுதோறும் கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

4. இனும் நிலங்களுக்கு ரயத்வாரி தீர்வை வசூலிக்கப்படும்; இதன் மூலம் ரூ. 30 இலட்சம் கிடைக்கும்.

விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படுகிற ஒரே ஒரு அம்சம், பனை வெல்ல விற்பனை தான்.

சர்க்கார் பெருமைப் படுவதாகக் கூறிக்கொள்ளக் கூடியதெல்லாம், முன்னாள் இனும் கிராமங்களில் கிராம அதிகாரிகளாயிருப்போருக்கு, இதர ரயத்வாரி கிராமங்களின் அதிகாரிகளைப் போன்று சம்பளம் தருதல், சென்னை சர்க்கார் தலைமை அலுவலகத்தில் ஒரு பிரிவு குமாஸ்தாக்களுக்கு சிறிய அளவு சம்பள உயர்வு தருவது, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நிலையை உயர்தர கிரேடு ஆசிரியர்கள் நிலைக்கு உயர்த்துவது, சர்க்கார் ஊழியர்களின் குழந்தைகளுக்குப் பத்தாவது வகுப்பு வரை கல்விக் கட்டணச் சலுகையளிப்பது ஆகிய அம்சங்கள் மட்டும்தான்.

1956 — 57-ம் ஆண்டிற்கான இந்தப் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தை நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம் நேற்று சென்னை சட்டசபையில் தாக்கல் செய்து பேசியிருக்கிறார்.

ஆசிரியர்களுக்குச் சம்பளம் உயர்த்துவது, சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள விகிதங்களைத் திருத்தி உயர்த்துவது போன்றவை, இந்த ஆண்டுத் திட்டத்திலேனும் நிகழக்கூடும்—இடம் பெறக்கூடும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமுற்றிருக்கின்றனர்.

முதலீட்டுச் செலவு, ஐந்தாண்டுத் திட்டம், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப் பாசனம், மருத்துவ வசதி, கல்வி முதலிய அம்சங்களுக்காக செலவினங்களில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள், நடைமுறை வழக்கத்திற்கு மாறான எந்த முன்னேற்றத்தையும் சாதிப்பதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை.

தாராள உதவிபெற இடமுள்ளதாம்!

உரிய காலத்தில் கிடைத்துவிடும் என நிதி அமைச்சரின் நம்பிக்கை

சென்னை, பிப். 27—

"நடைமுறை ஆண்டில், தமிழகத்தில் ஏற்பட்ட புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு உதவுவதற்கென ரூ. 1 கோடியைக் கடனாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து தாராள உதவிபெற இடமுள்ளது; ஆகவே, இந்தத் தொகை உரிய காலத்தில் நமக்கு வந்து சேர்ந்துவிடும் என்று நம்பலாம்,"

என்று, சென்னை வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டசபையில் சமர்ப்பித்துப் பேசுகையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

சர்க்கரைக் ரூபாய்க்கு ஓரணா கூடுதலாக வரி விதிப்பது ஏழை மக்களைப் பாதிப்பதுமன்றி, எரிச்சலையும் உண்டுபண்ணக் கூடியதாகும் என்றும் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

அதிப்ருதி—ஏமாற்றம்!

சென்னை வரவு-செலவுத் திட்டத்தில் விற்பனை வரி விஷயத்தில் தேங்காய், பால் ஆகியவைகளுக்கு விலக்கு அளிக்கப்படுமென்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்தார்கள்!

கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு ஒன்றுமே செய்யப்படவில்லை என்பதைக் கண்டு எதிர்க்கட்சியினர் அதிருப்தியுறுகின்றனர்!

வேலை நேரம் குறைப்பு—ஊதியம் குறையாது!

லண்டன், பிப். 27—

அடுத்த ஆண்டிலிருந்து, வேலை நேரத்தை எட்டு மணியிலிருந்து ஏழு மணிக்குக் குறைப்பதற்கு ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரஸ் ஒப்புதல் தந்திருக்கிறதாம்!

சுரங்கத் தொழிலாளரும், 16-வயதிலிருந்து 18 வயதுக்குட்பட்டவர்களும் மட்டும் நாளொன்றுக்கு ஆறு மணி நேரம் மட்டும் உழைப்பர்; இந்த வேலை நேரக் குறைப்பால் ஊதியம் குறையாதாம்!

தானாகவே இயங்கி வாக்கு பதிவு செய்யும் சாதனம்

புதுடில்லி, பிப். 27—

தானாகவே இயங்கி, வாக்குப் பதிவு செய்யும் சாதனத்தை மக்கள் சபையில் பொருத்தும் உத்தேச யோசனை அங்கீகரிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சில், 1955—56-ல், விவசாயம், கால்நடை வளர்ப்பு, மிருக வைத்தியம் ஆகியவை சம்பந்தமாக மொத்தம் 138 ஆராய்ச்சித் திட்டங்களைத் துவக்கி வைத்தது; அவற்றிற்கான செலவு மொத்தம் ரூ 64,61,000 ஆகும்.

மறைவு

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி அவர்களின் 12 வயது பெண் யோகாம்பாள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து, 25-2-56 பிற்பகல் 2 மணிக்கு குடவாசலில்தனதுஇல்லத்தில உயிர் நீத்தாள். நமது அனுதாபம் நண்பர் அவர்களுக்கு உரித்தாகுக. (ஆ-ர்.)

கவர்னர் பேசினார் — தாளம் போட்டனர்!

புவனேசுவரம், பிப். 27—

வரவு-செலவுக் கூட்டத்தைத் துவக்கிவைக்க ஒரிசா கவர்னர் சட்டசபைக்குள் நுழைந்தாராம்!

மாநிலப் புனரமைப்பு சம்பந்தமாக ஒரிசா மக்களுக்கு இந்திய சர்க்கார் இழைத்துள்ள அநீதியை மக்கள் ஆட்சேபிப்பதாகவும், அவர்களுடைய உணர்ச்சியை உணர்ந்து சட்டசபையில் கவர்னர் பேச வேண்டாம் என்றும், அவரை எதிர்க் கட்சித் தலைவர் சட்டசபையின் வாயிலில் நிறுத்திக் கேட்டுக் கொண்டாராம்!

'நிலைமையை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்' என்று கூறிவிட்டு, கவர்னர், சட்டசபையில் நுழைந்து பேச ஆரம்பித்தார்.

கவர்னர் தன்னுடைய பேச்சைத் துவக்கியதிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசையைப் பலமாகத் தட்டிக்கொண்டிருந்தார்களாம்!

கவர்னர் தன்னுடைய உரையை முடிக்கும் வரையில் தாளம் போடுவதை எதிர்க்கட்சியினர்நிறுத்தவே இல்லையாம்!

'உரையை முடித்துக்கொண்டு கவர்னர் வெளியே சென்ற சமயத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்; ஆனால், எதிர்க்கட்சியினர் எழுந்து நிற்கவில்லை' என்றெல்லாம் செய்திகள் கூறுகின்றன.

மாவ்லங்கர் மறைவு

அகமதாபாத், பிப் 27—

இந்தியப் பாராளுமன்ற 'சபாநாயகரான' ஜி. வி. மாவ்லங்கர் தமது 68-வது வயதில் இன்று இயற்கை எய்தினார்.

இதய நோய்க்குப் பலியான அவர், கடந்த ஒன்பது ஆண்டுகளாக டில்லி பாராளுமன்றத் தலைவராக இருந்து பணிபுரிந்து வந்திருக்கிறார்.

சபர்மதி நதிக்கரையிலுள்ள மயானத்தில், அவரது சடலம் தகனம் செய்யப்பட்டது.

அவரது மறைவுக்கு வருத்தம் தெரிவிக்குமுகத்தான் டில்லி மக்கள்சபை இன்று ஒத்திவைக்கப்பட்டது; பலரும், மாவ்லங்கரின் சேவையை குறித்துப் பேசினர்.

சென்னை, மைசூர் சட்டசபைகளும், மாவ்லங்கர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நடவடிக்கைகளை சிறிது நேரம் ஒத்திவைத்திருக்கின்றன.

தலைமைக் கழகம் : அறிக்கை—4/56

நன்றி தெரிவிப்பு

சென்னையில் அமைந்த சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, பிப். 20-ஆம் நாள் தமிழ்நாடு எங்கணும் பொதுவேலை நிறுத்தத்தையும், கடையடைப்பையும் மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நிறைவேற்றித் தந்த பொது மக்கள் அனைவர்க்கும், சர்வ கட்சிகளையும் சேர்ந்த தோழர்களுக்கும், கூட்டணியின் ஒரு உறுப்பாக அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் என்ற முறையில் என் மனமுவந்த நன்றியறிதலைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வகட்சிக் கூட்டணியில் ஒரு உறுப்பாகத் தி. மு. கழகம் அமைந்திருக்கிறது என்பதை உணர்ந்து, கூட்டணியின் வேண்டுகோள்களையும், கடமைகளையும் செவ்வனே நிறைவேற்ற முழு ஒத்துழைப்பையும் ஆங்காங்குக் கொடுத்து நற்பணியாற்றிய தி. மு. க. கிளைத் தோழர்கள் அத்துணைப் பேர்க்கும் என் உளமார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நானும் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களும் பொதுவேலை நிறுத்தத்திற்கு முன்னால் சுற்றுப்பயணம் செய்தபோது, ஆங்காங்குக் கழகத் தோழர்களையும், சர்வகட்சிக் கூட்டணியைச் சேர்ந்தவர்களையும் கண்டு அளவளாவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்த கிளைக் கழகங்களுக்கெல்லாம் என் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமைச் சர்கவட்சிக் கூட்டணி அவ்வப்போது விடும் வேண்டுகோள்களை அவ்வப்போது நிறைவேற்றியும், பிற பொழுதுகளில் எப்பொழுதும் போல் கழகப் பணிகளில், குறிப்பாக உறுப்பினர் சேர்க்கும் பணி, மாநில மாநாடு பற்றி விளம்பரம் செய்யும் பணி ஆகியவற்றில் சீரிய தொண்டாற்றி வரும்படி தி. மு. கிளைக் கழகத் தோழர்கள் அத்துணைப் பேரையும் கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்,'' சென்னை—13 28-2-1956

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

பத்து வயது சிறுவனுக்கு விபத்து விளைவித்த கொடுமை

வாழவும் முடியாது; சாகவும் மாட்டான்

ஒட்டாவா. பிப், 21—

கார் விபத்து ஒன்று பத்து வயதுச் சிறுவன் ஒருவனை வாழவும் விடாது; சாகவும் விடாது செய்து விட்டதாம்!

மைக்கேல் ஒட்ஸ் என்ற அச்சிறுவன் இன்னும் 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு உயிர் வாழ்வான் என்றும், ஆனால் அவன் என்றுமே எழுந்திருக்கமாட்டான் என்றும் டாக்டர்கள் தெரிவிக்கின்றனராம்.

அவனது மூளை சீர்செய்ய முடியாத அளவு பாழாகிவிட்டதாம்.

பாவம், சிறுவன்! பாழாய்ப் போன கார் விபத்து அவனது எதிர்காலத்தைக் கொன்றே கொண்டுவிட்டது.

கடந்த ஆறு திங்களாக மருத்துவ மனையில் படுத்திருக்கும் அவன், இடையில் இரண்டு திங்களுக்கு முன் ஒரே ஒரு முறை மட்டுமே வாய் திறந்து அழுதானாம்—கண்களில் நீர் துளிக்க அழுது கொண்டிருந்த அன்னையைப் பார்த்தபோது!

எப்போதும் திறந்தே இருக்கும் அவன் கண்களில் பல நேரமும் நீர் தேங்கிக் கிடக்கிறதாம்! அமைதியாக அழுதுகொண்டே இருக்கிறானாம்!

மனித சக்திக்கு உட்பட்ட அத்தனை மருத்துவமும் பார்த்தாயிற்று என்றும், இனி தங்களால் சாதிக்கக் கூடியது எதும் இல்லை என்றும் டாக்டர்கள் தெரிவித்து விட்டனராம்.

விபத்து சிறுவனை வாழவும் விடாமல், சாகவும்விடாமல் கொடுமைப் படுத்திவிட்டது!

கைத்தொழில் நிர்வாகம்

தொழிலாளருக்குப் பங்கு

பெங்களூர், பிப். 27—

சர்க்காரால் நடத்தப்படும் கைத்தொழில்களின் நிர்வாகத்தில், தொழிலாளர்களுக்கும் பங்கு தருவது என்று மைசூர் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்களாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.